# பாப்பானவரைப் பின்பற்றும்படியாக இந்துக்களை வேண்டுகின்றார்

"காத்தா நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பதுவியர்த்தம்"

காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

3-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ௵ கார்த்திகை ௴ 9-ந் உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 43-ம் இல.

"சின்னப்பபாப்பானவர் அர்ச்சிய சிஷ்டபட்டம் சூட்டப்படுவதற்குத் தகுதிவாய்ந்தவர்—அவர் எதிர்காலத்தில் அப்பட்டம் சூட்டப்படுவார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை—ஏனெனில், தமது உன்னதபதவியை வகித்தநாள்முதல் அநேக சற்கருமங்களை அவர் செய்துகொண்டுவருகிறார்" என்று இந்தியாவிலே கேரளநாட்டில் பிரசுரமாகும் பத்திரிகையொன்றுக்கு இந்துமகனொருவர் எழுதியகடிதம் ஒன்றில் எழுதியிருக்கின்றார்.

"செயற்கை வழிமுறைகளால் செய்யப்படும் குடும்பகட்டுப்பாட்டினைத் தடைசெய்வதான அதிகம்பிந்திய அவருடையபொதுநிருபம் வெளியாகியிருப்பது, ஒழுக்கச்சீர்கேடென்று காந்திஜி வழமையிலே அழைத்துவந்த இந்தமாபெரும் சீர்கேட்டினுள் விழுவதிலிருந்து ஐம்பதுகோடி கத்தோலிக்க மக்களைக் காத்துவைக்கும் அதிகம் ஞானமுள்ள மற்றொருதீர்ப்பாகு"

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## ஆசியாவை விழிப்பாயிருக்கச்செய்யும் ஒழுக்கப்புனர் ஆயுதசபையினர் மகாநாடு

உலகில் செல்வம் படைத்த தேசங்கள் செல்வம்குன்றிய தேசங்கள் என இருபிரிவுகளுள் செல்வப்பங்கிலுள்ள இந்த வித்தியாசத்தை அகற்றுவதிலேயே உலகசமாதானம் பெருமளவு தங்கியுள்ளது. உலகிலுள்ளநிலை ஆசியாவிலேயும் காணத்தக்கதாயிருக்கின்றது. இக்கண்டத்திலும் வளர்ச்சியுற்ற நாடுகள் வளர்ச்சி பெறாத நாடுகளென இருபிரிவுகள் இருப்பதை நாம் காண்கிறோம். இப்பகுதிகளில் இந்தக்குறைபாட்டைநீக்க ஆசிய தலைவர்கள் சிலர் முயற்சிசெய்து வருகின்றனர்—இந்நோக்கமாகவே 15தேசங்களிலிருந்து சுமார் 60 பெரியோர் இம்மாசம் 5-ம் திகதி கொழும்பில் மகாநாடு கூடுகின்றனர் இவ்வறிஞருக்குள் ஒருவர் மகாத்மாகாந்தியின் பேரன் சிறி இராஜ் மோகன் காந்தி. இலங்கைப் பெரியோர் அழைப்பின் விளைவாகவே இச் சர்வதேச பெரியோர் மகாநாடு இங்கு கூட்டப்பட்டிருக்கின்றது.

## யாழ். துணை ஆயர்

### எல். ஆர். அன்ரனி அடிகளாருக்காக மக்களின் செபம்

இம்மாதம் 21ஆம் திகதி காலை யாழ்ப்பாண ஆசனக் கோவிலில் மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட இருக்கும் அன்ரனி அடிகளாருக்குத் தேவனின் அருட்பிரசாதங்கள் ஏராளமாகக் கிடைத்தருளவேண்டுமென்று யாழ்ப்பாண மேற்றிராசன மக்கள் யாவரையும் விசேஷ முறையில் செபித்துக்கொள்ள யாழ்ப்பாண மேற்றிராணியார் எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் கேட்டிருக்கின்றனர். இதற்காக இம்மாதம் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதி பின்னேரங்களில் செபமாலையும் தேவநற்கருணை ஆசீர்வாதமும் ஒவ்வொரு விசாரணைப் பங்கிலும் ஒப்புக்கொடுக்கப்படும். துணை மேற்றிராணியாருக்காக மன்றாடுவதுடன் இந் நாட்களில் குருத்துவ, சந்நியாச நிலைமைக்கு இளைஞருக்குத் தேவ அழைத்தல் கிடைப்பதற்கும் இச் செபங்கள் ஒப்புக்கொடுக்கப்படும்,

## ஆசிய கத்தோலிக்க வைத்தியர் மகாநாடு

சென்ற மாதம் ஒருவார காலமாக யப்பான்தேச ரொக்கியோ நகரிலே ஆசிய கத்தோலிக்க வைத்தியரின் 4ஆவது மகாநாடு நடைபெற்றது. யப்பானிய கத்தோலிக்க வைத்திய சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற முதல் சர்வதேச மகாநாடு இதுவேயாம். தென்கிழக்கு ஆசிய தேசங்களிலே உள்ள மக்களது சுகாதாரநிலை, சனத்தொகைப்பெருக்கம் ஒழுக்கமும் சத்திரவைத்தியமும் ஆகிய பல கருமங்கள் நுணுக்கமாக ஆராயப்பட்டன. ஆசிய தேசங்களிலிருந்து வைத்தியர், தாதியர் முதலியோர் மேலைத் தேசங்களில் வேலையை நாடும் விருப்பம் எமது நாட்டுக்குப் பொதுவாகத் தீமையையே விளைவிக்கின்றது என்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

## முன்னாள் ஜாக்குலின் கெனடியும் வத்திக்கானும்

முன்னாள் ஜாக்குலின் கெனடியாகவும் அமெரிக்காவின் முதல் வரிசைப் பெண்மணியாகவும் இருந்து உலகப்பிரசித்திபெற்ற இப் பெண் மறுவிவாகம் செய்து ஜாக்குலின் ஒனாசிஸ் ஆகியது பற்றி வத்திக்கான் அதிகாரிகளும் பத்திரிகைகளும் மௌனம் சாதித்தது ஏனோ எனப் பலர் வினவியுள்ளனர். இவர்கள் யாவருக்கும் வாய்ப்பூட்டுக் கொடுக்கத்தக்க பதில் சென்றவாரம் பத்திரிகையாளர் மகாநாட்டில் வத்திக்கான் செய்தி அதிகாரிகளில் ஒருவரான போஸ்ரோ வாலயின் அடிகளார் கொடுத்திருக்கிறார். அவர் கூறியிருப்பதாவது: "தான் கட்டிய மனைவியை விவாகரத்துச் செய்துகொண்ட செல்வந்தர் ஒனாசிசை ஜாக்குலின் மறுமணம் செய்தது கத்தோலிக்க திருச்சபையின் விதிகளுக்கு முரணானது இவ் விதிகளை மீறும் தனிநபர்களைப் பற்றி வத்திக்கான் எடுத்துக்கூறுவது வழக்கமல்ல." இச்செய்தி கிடைப்பதன் முன் பலரும் கத்தோலிக்க திருச்சபை, கிரேக்க ஒதொடக்ஸ் சபையுடன் சேர்ந்து இக்கருமத்தை மூடிமறைக்கப்பார்க்கிறது என்று கூறிக்கொண்டனர். இனியும், இவர்கள் வேறு சொல்வதற்கு இடமுண்டோ?

## 500 இளம் மரியாயின் சேனையினர் ஆன்மதொண்டுபுரிய ஆவல்

கொழும்பு, அதிமேற்றிராசனத்துக்குரிய விசாரணைப்பங்குகளுக்குச்சேர்ந்த மரியாயின் சேனை இளைஞர் சுமார் 500பேர் சென்றவாரம் கொழும்பு கொட்டாஞ்சேனையிற்கூடி தாம் எவ்வாறு இல்லறத் தொழிலாளருக்குரிய தொண்டுகளில் ஈடுபடலாமென ஆலோசித்தனர். இந்த இளைஞரில் 25பேர் அனுராதபுரிப்பகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கும் பலகுருமார், சந்நியாசிகள் கன்னியர்களும் இவர்களுக்கு பலஆலோசனைகள்கூறினர். தற்காலஉலகில் வேதபோதனைக்கு ஏற்பட்டிருக்கும் பலதடைகளையும் இவ்விளைஞரின் சேவையினால் அகற்றிவைக்கலாமென கொழும்புத் துணைஆயர் எட்மண்ட் பெர்ணாந்து அடிகளார் கூறினார். மகாநாட்டில், ஆன்மவளர்ச்சிக்குத் தொண்டுசெய்ய இளைஞர் வாக்குறுதி அளித்தனர்.

## கீழ்ப்படியும் செயல் சுய விருப்பத்துக்கு எதிர்; ஆனால் அவசியம்

சென்றவாரம் பரிசுத்த தந்தை அளித்த பொதுப்பேட்டியில் கீழ்ப்படிதலில் உள்ள கிறிஸ்தவமகிமையைப்பற்றி அவரைப்பேட்டி கண்டவர்களுக்கு அவர் எடுத்து உரைத்தார்—அவர்கூறியது குறிப்பாக "பிறப்பு ஒழுங்கு" என்னும் அவரது நிருபத்துக்கு உலகின் பல பாகங்களிலுமிருக்கும் எதிர்ப்பை அவர் நன்கு உணர்ந்திருக்கின்றார் என்பதைக் சுட்டிக்காட்டிற்று. எதிர்ப்பும், மனநிலையும் எவ்வாறாயிருப்பினும் பரிசுத்த தந்தை உண்மையென உணர்ந்ததை எடுத்துக்கூறியதன் பின்பு அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பது கத்தோலிக்கரின் கடமை என்பதையும் பலதடவைகளிலும் கூறியிருக்கிறார். தமது கடமையை சலியாது செய்துவருவதில் பரிசுத்த தந்தை எவ்வளவு விழிப்பாக இருக்கிறார் என்பது எவருக்கும் தெளிவாக இருக்கின்றது;

## கத்தோலிக்க ஆயர்களை மிரட்டுகிறார் தென்ஆபிரிக்க பிரதமர்

சென்றவாரம் தென் அமெரிக்காவிலுள்ள சகல கிறிஸ்தவசபை ஆயர்களும் தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் நிறக்கொள்கை கிறிஸ்தவ போதனைகளுக்கு முரண்பட்டதென்று கண்டித்ததாகஅறிவிக்கப்பட்டிருந்தது, இக்கண்டனத்தினால் மிகவும் பெறற் சூடு அந்தஅரசாங்கம் அத்தேசத்தில் தொண்டுசெய்யும் வெள்ளைத் தோல்படைத்த குருமார், மேற்றிராணிமார்களை ஏளனம் செய்வதோடு பயமுறுத்தவும் தொடங்கியிருக்கின்றது. "தேச சட்டங்களை அவமதிக்கும் எவராயினும், நிறத்தவராயிருப்பின் வெள்ளையராயிருப்பினும், குரு ஆடை அணிந்தவராயிருப்பினும், அணியாதவராயிருப்பினும் தண்டிக்கப்படுவது திண்ணம்" என அது அறிவித்திருக்கின்றது.

## யேசுசபைத் தலைவரால் இந்தியா மகிமைப்படுத்தப்பட்டது

ரோமாபுரியில் இருக்கும் யேசுசபைத் தலைமைஸ்தாபனத்தில் அண்மையில் நிறுவப்பட்ட உலக சமூகசேவைக் காரியாலயத்தின் தலைவராக வண. அய்வேண் சுவாமியார் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இன்று கத்தோலிக்க திருச்சபை உலகின் பசிப்பிணி வறுமைமுதலியவற்றில் எடுத்துவரும் கவனத்தை அவதானித்தால், இந்த முக்கிய நியமனத்தினால் யேசுசபைத்தலைவர் இந்தியமக்களின் ஆற்றலில் எத்தகைய மதிப்புடையவர் என்பதை விளங்கிக்கொள்ளலாம். ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய பிரதேசங்களே இக்காரியாலயத்தின்வேலையின் விளைவாக நன்மைபெறும் நாடுகளாகும்.

கல்வியில்லாத ஆன்மா பணிசெய்யாத சலவைக் கல்போன்றது

—அடிசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 10 | ஞா. | பரிசுத்த ஆவிவிழாவுக்குப் பின் 23-ம்ஞாயிறு | [ப] |
| 11 | தி. | புனித மார்த்தீன் | [வெ] |
| 12 | செ. | புனித மார்த்தீன் | [சி] |
| 13 | பு. | புனித திதாக்குஸ் | [வெ] |
| 14 | வி. | புனித ஜோசப்பாத் | [சி] |
| 15 | வெ. | புனித ஆல்பர்ட் மகான் | வெ] |
| 16 | ச. | புனித ஜெர்த்துருத்தம்மாள் | [வெ |

சத்தியவேத
பாதுகாவலன்

1968-ம் ஞு கார்த்திகை மீ 9-ங்வ

## வழிபாடும் சமூகப்பணியும்

சமீபகாலத்தில் திரு வழிபாட்டைப்பற்றியும், அதன் மாற்றங்கள், பரிணமம் பற்றியும் போதிய மட்டும் இருசார்பிலும் பேசப்பட்டுவிட்டது. வழிபாட்டு மாற்றங்களை வரவேற்பவர்களும் எதிர்ப்பவர்களும் ஒருபுறமிருக்க, அதற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது அவசியந்தானா என்ற கேள்வியை எழுப்புபவர்களும் உளர்.

வழிபாடானது மக்களை இதுவரை மாற்றவில்லை, இனி மாற்றப்போவதுமில்லை என அவர்கள் வாதிடுகின்றனர். மக்கள் வாழ்வில் ஏதாவதொரு திருப்பத்தை ஏற்படுத்தாவிடின் அதற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பானேன்? அதைவிட சமூக நலனுக்காக ஆற்றப்படும் பணிகளில், இளைஞர், ஏழைகள், நோயாளர் மத்தியில் செய்யப்படும் தொண்டுகளில், ஏனைய. நற்கிரிகைகளில் கூடிய கவனம் செலுத்தினால் என்ன? சுருங்கக் கூறின் திருச்சடங்குகள் தேவ திரவிய அனுமானங்கள் ஆகியவற்றைவிட அப்போஸ்தலிக்க சேவையில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே அவர்களது அபிப்பிராயமாகும்.

அவர்களது கருத்திலும் ஓரளவு உண்மை இல்லாமலில்லை. வழிபாட்டுடன் மட்டும் நாம் திருப்தி அடைந்துவிடக்கூடாது. அதைச் சமன்படுத்த பயனுள்ள சமூகத் தொண்டும் அவசியமானது. கோயிலே சகலமும் என்று கருதியிருந்தகாலம் மலையேறிவிட்டது. "கிறிஸ்துநாதரை தேவ திரவிய அனுமானத்தில் சந்திப்பது" பற்றிக் கூறுவதெல்லாம் அழகாகவும் இனிமையாகவும் இருக்கின்றது. ஆனால் அதேசமயத்தில் எம் பக்கத்திலுள்ள மனிதரில் அவரைக் காண நாம் முயற்சி செய்யாதிருக்கக்கூடும்.

ஆனால் இதில் இன்னொரு உண்மை என்னவெனில், தேவ திரவிய அனுமானங்களிலும் வேதாகமத்திலும் கிறிஸ்துவைக் காண முயற்சி செய்யாவிட்டால், கிறிஸ்துவ சமூகத்தைக் கட்டியெழுப்புவதிலும் நாம் கருதிய அளவுக்கு நன்மை செய்ய முடியாதவர்களாயிருப்போம்.

தேவனில் நம்பிக்கையற்றவன் உலகில் சில நன்மைகளைச் செய்யலாம் என்பது மெய்யே. அவன் ஏழைகளிடத்தும் அனாதைகளிடத்தும் உண்மையான கரிசனை உடையவனாக அவர்களுக்காகப் பாடுபடக்கூடும். ஆனால் அவன் செய்பவை எல்லாம் அவனது சொந்தச் சக்திக்குட்பட்டவை. எனவே அவன் தான் செய்யக் கூடிய அளவு நன்மை செய்ய முடியாதவனாகிறான். அவனது இரக்கமும், தியாக சிந்தையும் போற்றத்தக்கவையாயினும், அவனில் கிறிஸ்து வாழாதபடியால் அவற்றுக்கு அவரது சக்தி இல்லாமற் போய்விடுகிறது.

எம்மில் கிறிஸ்து வாசம்செய்வதே, ஒரு மனிதாபிமானமுள்ள நற்செயலை அப்போஸ்தலிக்க சேவையாக்குகின்றது. பிறரது உடலுக்கு மட்டும் நன்மை செய்யாமல் அவர்களது உள்ளத்தையும் ஆத்துமத்தையும் ஒருபடி உயர்த்தக்கூடிய செயலாகின்றது.

ஆகவே இறையன்பும் பிறரன்பும் போலவே திருவழிபாடும் பிறர்நலப் [illegible] வின் இரு [illegible]

## கிறிஸ்தவ ஒற்றுமைக்கு உதவ ஏழுகலங்கரை விளக்குகள்

சென்றவாரம் எடின்பரோ நகரில் கிறிஸ்தவ ஒற்றுமைப் பேச்சுகளில் கலந்துகொண்ட பெரியார்களில் வத்திக்கானின் சார்பாக வில்டர் பிரூன்ற் அடிகளும் ஒருவர். கிறிஸ்தவஒற்றுமை முயற்சிகள் கற்பாறைகளில் மோதிக்கொள்ளாது சேமமாக நடைபெற்று முற்றுப்பெற ஏழுகலங்கரை விளக்குளாக அவர் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டார்.

● தூய ஆவியானவர் கூறுவனவற்றைக் கேட்கவேண்டும்.

● தனது விசுவாசத்துக்குப் பிரமாணிக்கமாக இருக்கவேண்டும்.

● இம்முயற்சியில் ஈடுபடும் மறுசபையினருக்கு நல்மதிப்பு அளிக்கவேண்டும்.

● பிறசபையினருடன் தொடர்பு கொள்ள ஆவலுடையவராய் இருக்கவேண்டும்.

● பிறசபையினரில் நம்பிக்கை இருக்கவேண்டும்.

● இம்முயற்சியினால் வரக்கூடிய இவ்வுலக நன்மைகளைக்கருதப்படாது.

● உண்மையான சமயசுயாதீனத்தை விரும்பவேண்டும்.

வில்டர் பிரூன்றஅடிகளார் வத்திக்கானில் இருக்கும் கிறிஸ்தவசபைகளின் ஒற்றுமைக் காரியாலயத்தின் அலுவல் அதிகாரியாவர்.

## குருடர் குருடருக்கு வழிகாட்டினர்

தமது 82-ம் வயதில் வண. பிறதர் ஓனேல் சென்றவாரம் அவுஸ்திரேலியாவில் காலமானர். இவர் டிலாசால் சபைத்துறவி. 1926-ம்ஆண்டு கண்பார்வையைஇழந்த இதர் அதன் பின் கண்பார்வை யற்றவர்களுக்காகத் தனது வாழ்நாளை அர்ப்பணம் செய்தார். இவரால் குருடருக்கென பல ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன இந்நிலையங்கள் பலதரப்பட்டன. வயோதிப குருடருக்கு ஒருநிலையமும், அரைகுறைவுப்பார்வையுள்ள இளம் யுவர், யுவதிகளுக்கென வேறு வேறான நிலையங்களும் இவரால் ஸ்தாபிக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட்டன. இவருக்கு அவுஸ்திரேலிய தேச அரசாங்கம் பல மகிமைப்பட்டங்களை அளித்துக் கௌரவம் செய்திருக்கின்றது.

# தங்க யூபிலி விழா

யாழ்ப்பாணம், தோலகட்டிச் செபமாலைத்தாசர் கன்னிகாஸ்திரிமார் சபைச் சிரேஷ்டரான சங். ஜீன் மரியே தாயார் அன்று வியாழக்கிழமை தாம் கன்னிகாஅந்தஸ்தில் பிரவேசித்த 50ஆம்ஆண்டு நிறைவுத் தங்கயூபிலி விழாவைக் கொண்டாடினர். ஸ்பானிய தேசத்தில் 1898-ம் ஆண்டு பிறந்த தாயார் அவர்கள் இற்றைக்கு 50வருடங்களின்முன் திருக்குடும்ப சபைக் கன்னியாஸ்திரியாயினர். இன்னும் இவர் அதேசபைக் கன்னியாஸ்திரியாகவே இருந்துவருகிறார்.

செபமாலைத்தாசர்களின துறவறசபையை அடியிட்டவரான வண. பி. ஏ. தோமஸ்சுவாமிகள் செபமாலைத்தாசர் கன்னிகாசபையை ஆரம்பிப்பதிலே இவரின்சேவையை வேண்டிநின்றார். அதனால் இவர் 1948 ஆம்ஆண்டு அச்சபைக்குப் பொறுப்பாளியாக விருந்து தமது அயராமுயற்சியாலே அதனைப் பெரிதும்வளர்ச்சியும், சிறப்புமடையச்செய்துள்ளார்.

இன்று இச்சபை இந்தியாவிலே தானும்இருமேற்றிராசனங்களில தனதுமடங்களைக்கொண்டு விளங்குகின்றது. இவற்றில்ஒன்று தூத்துக்குடியிலே 1954ஆம்ஆண்டின் ஐப்பசி மாதத்திலும், மற்றது திருவனந்தபுரத்திலே 1963ஆம்ஆண்டு ஐப்பசி மாதத்திலும் ஸ்தாபிக்கப்பட்டன. இலங்கையும் இருமடங்களைக் கொண்டிருக்கின்றது இவற்றில் ஒன்று தேவத்தையிலே 1956 ஆம்ஆண்டும், மற்றது அச்சுவேலியிலும் திறக்கப்பட்டன. இந்தியமடங்கள் இரண்டிலும் 64கன்னிகாஸ்திரிமாரும் இலங்கை மடங்கள் இரண்டிலும் 68கன்னிகாஸ்திரிமாரும் இருந்துவருகிறார்கள்.

ஜூபிலிநாயகரான சங், மரியதாயார் அருமையாக எவைகளைச் சாதித்தபோதிலும் எதனையுமே பிரஸ்தாபத்திற்குக் கொணடுவராது அமைதியாக இருந்துவருவார். ஆனல், செபமாலைத்தாசர்கள் கன்னிகாசபையை அடியிட்டு அதனை உன்னதவளர்ச்சியடையச் செய்வதில் ஆரம்பகாலங்களில் அரும்பிரயாசைபெடுத்து அயராதுழைத்த ஒருவர்இருந்தால் அவர் சங். தாயார் அவர்களேஎனலாம்.

## அங்கிளிக்கன் சபை மா தேவாலய கட்டிடத்துக்கு கொழும்பில் அடிக்கல் இடப்பட்டது

1910-ம்ஆண்டுதொடக்கம் அங்கிளிக்கன் கிறிஸ்தவ சபையினர் கொழும்பில் ஒரு கிறிஸ்த மாதேவாலயம் கட்டி எழுப்ப எத்தனித்திருந்தபோதும், இடையிடையே யுத்தம், பொருளாதாரக் கஷ்டம் முதலியன ஏற்பட்டு இம் முயற்சியில் தாமதம் ஏற்பட்டிருந்தது. இறுதியாக கொழும்பு புள்ளேர்ஸ் வீதியில் பாரிய செலவில் திட்டமிடப்பட்டிருக்கும் மாதேவாலயத்துக்குச் சென்றவாரம் கொழும்பு மேற்றிராணியாராகிய வந்தனைக்குரிய ஹறல்டி சொய்சா அடிகளாரால் அஸ்திவாரக்கல் இடப்பட்டது.

## உலக கத்தோலிக்க நியாயவாதிகள் ஒன்றுகூடுகின்றனர்

"மக்களின் முன்னேற்றத்தை வளர்க்க நாம் எவ்வாறு உபயோகப்படலாம்" எனும்சிந்தனையே மனதில் கொண்டவராக இவ்வருடம் ஆபிரிக்காக் கண்டத்தில் செனகால் தேசத்தில் டக்காநகரத்தில் உலக கத்தோலிக்க நியாயவாதிகள் சங்கம் அடுத்தமாதம் கூட இருக்கிறது. உலக கத்தோலிக்க அறிஞர்அடங்கிய "பாக்ஸ் ரோமானு" என்னும் சர்வதேச கத்தோலிக்க ஸ்தாபனத்தின் கிளைகளில் ஒன்றே நியாயவாதிகள் அடங்கிய இப்பகுதி. ஆபிரிக்கா, ஆசியா, தென்னமெரிக்காக் கண்டங்களிலுள்ள வளர்ச்சியுறாத தேசங்களின் பழைய நாகரிங்களை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் எவ்வாறு அந்நாடுகளுக்கு முன்னேற்றம் அளிக்கலாம் என்பது ஆராயப்படும்.

## பரிவோடு எமக்காக மன்ருட வேண்டும்

—:( ஏ. டபிள்யு. அரியநாயகம் ):—

முகத்தோடு முகமாக யேசுவைக் கண்டு
முடிவில்லாப் பேரின்ப முடிதனைச் சூட
பரிவோடு எமக்காக மன்ருட வேண்டும்
பாவிநாம் செய்பிழை பரமனே பொறுக்க
புரிந்திட்ட சிறுபாவம் அனைத்துமே இன்று
புயலாக நெருப்பாகப் பொங்குதே ஐயோ
அருள் வேண்டி அன்புடன் உம்மையே நோக்கும்
அவலோசை அனபரே பாங்குடன் கேளிர்.

குற்றத்தின் கொள்கலம் போன்றஎம் உடம்பால்
குறைவிலாத் தீமைகள் புரிந்துமே வாழ்ந்தோம்
பற்றென்றும் பரிவென்றும் உலகினில் வாழ்ந்து
பாவியாம் பலருக்குத் தீமைகள் செய்தோம்
சற்றேனும் மறுவாழ்வை நாமெணணி வாழ்ந்தால்
சமாதானம் எம்முடன் என்றுமே இருக்கும்
வற்றிடும் உலகன்பு வார்த்தையில் காட்டும்
வாழ்வென்ன வாழ்வென்று நாமெணணு கின்றோம்.

எத்தனை ஆன்மாக்கள் உம்மையே நோக்கி
எழுப்பிறோம் குரலொலி உண்மையில் கேளிர்
பக்தியாய் பலிபூசை பாங்குடன் கண்டு
பரமனின் பாதத்தில் எமக்காகப் படைப்பீர்
கத்தும் குரலொலி காதினில் விழவும்
கண்மூடி மௌனியாய் நீர் வாழலாமோ?
முத்தான செபமாலை மும்முறை செபிப்பீர்
முடிவிலாச் சமாதானம் எமக்குமே அருள்வீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை ஒன்று கேட்பேன்...!

செல்வி ரோஜா சாமுவேல்

### துறவிகேட்ட முள்!........

மலையடிவாரத்தில் அமைந்திருந்தது அந்த துறவிகள் ஆச்சிரமம். துறவற சபைகளுள்ளேயே மிகக் கண்டிப்பான ஒழுங்குகளை அனுசரித்துவரும் ஒரு சபை அது. தலைமைத் துறவி தேவதாஸன் அவர்கள் கண்காணிப்பில் சுமார் 150 மடாதிபதிகள் அங்கே இறைசேவைக்கெனத் தம்மை அர்ப்பணித்திருந்தனர். சிற்றின்பம், இன்ப சுகம், செல்வபோகம் இவைதான் வாழ்வு என்று கருதிய உலகுக்கு எதிரான போக்கில், கண்டிப்பான மௌனம், அட்டதரித்திரம், தவ வாழ்வு இவற்றை மேற்கொண்டவர்களாய் இறைவனில் இன்பம் கண்டனர் அத்துறவிகள். இவர்களுள்ளே துறவி வியோனிஸ் தம் சிறந்த சந்நியாச வாழ்க்கை முறையினுல் மற்றச் சந்நியாசிகளுக்கே ஒரு மேல்வரிச்சட்டமாக விளங்கி வந்தார். துறவிகள் அனைவரினதும் நன்மதிப்புக்காளாகியிருந்த அவருக்கே ஆச்சிரமத்தின் முக்கிய காரியதரிசிப் பொறுப்பும் அளிக்கப்பட்டிருந்தது. எனவே, ஆச்சிரமத்தின் முழுப் பொறுப்பையும் கொண்டவராய் விளங்கியதுடன், வெளியுலகிலும் சென்று மடத்துக்கான அலுவல்களைக் கண்ணியமாக ஆற்றிவந்து அனைவரது புகழுக்கும் ஆளாகியிருந்தார் துறவி வியோனிஸ். நாட்கள் பறந்துகொண்டே போயின. இளைஞனை துறவி வியோனிஸ் ஆன்மாவில் அன்பர் யேசுபால் சுடர்விடும் அன்பு நாளாந்தம் பெருகிக் கொண்டேயிருந்தது. கடினமான துறவற வாழ்வுடன் அவர் திருப்தியடைந்து விடவில்லை. சிலுவைநாதரைக் கண்டு பாவித்து இறைவன் பட்டபாடுகளைப் போலத் தாமும் பெரும் துன்பதுரிதங்கட்கு ஆளாக வேண்டுமென அவர் விரும்பினுர். யேசுவின் பாடுகளின் மேல் தணியாத காதல் அவருக்கு. "அவர் பாடுகளுடனே தானும் ஐக்கியமாகி விட்டாலோ!......என்பதுதான் அவரது ஒரே ஆசை.

துறவி வியோனிஸின் அறையிலிருந்து ஆச்சிரம ஆலயம் செல்லும் நடைபாதைவராந்தாவில் ஒருதிருமுக அரசரின் படம். பார்த்தவர் மனதைப் பரிதபிக்கச்செய்யும் பயங்கர தோற்றத்தில் யேசுவின் திருமுகம் துறவி வியோனிஸின் நாளாந்த ரசிப்புக்கு இடமளித்தது இப்படம். காலையும் மாலையும் அதனைக் கடந்து செல்லும் ஒவ்வொரு முறையும் அதன் முன் மண்டியிடுவார் நம் துறவி. "இறைவா! ...உன் துயருடன் என் வாழ்வை ஒப்பிட்டால் என்வாழ்வு உல்லாசப் படுக்கையாக வல்லவோ இருக்கிறது; உன்னை ஒன்று கேட்கின்றேன். உன் தலையை ஊடுருவும் அந்த முள்முடியிலிருந்து ஒரேயொரு முள்ளை எனக்குத் தரமாட்டாயா?"...என்று அவரது உதடுகள் வேண்டுதல் புரியும். பாடுபட்ட சிலுவைநாதரும் அவரது மன்ருட்டை நாளடைவில் ஏற்றுக் கொள்ளச் சித்தமானுர் போலும்; தமது அடியானுக்குத் தம் அன்பின் பரிசாக ஒரு முள்ளை அளித்தே விட்டார் ஒருநாள்.

### அன்பர் அளித்த முள் :

அந்த ஆச்சிரமவாசிகளின் மட்டில் அன்பு காட்டும் அரசன் ஒருவன் பல காததூரத்துக்கப்பால் ஒரு பெரும் இராச்சியத்தை ஆண்டுவந்தான். வருடத்தில் ஒருகுறிக்கப்பட்ட நாளில் அவன் ஆயிரம் தங்க நாணயங்களைத் தன் அன்புப் பரிசாக இவ் வாச்சிரம வாசிகளின் தேவைக்காக அனுப்பி வைப்பதுண்டு. அந்த வருடமும் அவ் வரசனின் தனுதிகாரி றெஜினேல்ட் ஆயிரம் தங்கநாணயங்களுடன் வந்திருந்தார். தலைமைத்துறவி தேவதாஸன் அவரை அன்புற உபசரித்து அவரோடு உரையாடிக் கொண்டிருந்தார். நாழிகையாயிற்று. மாலைவேளை மந்திரமாலை செபத்திற்காக ஆலயமணி ஒலித்தது. கண்டிப்பான ஒழுங்குகட்குப் பேர்போன ஆச்சிரமமாதலால் துறவி தேவதாஸன் திடீரென எழுந்து ஆலயஞ் சென்றுவிட்டார். றெஜினேல்ட் வெகுநேரமாகக் காத்திருந்தான். துறவியோ வருவதாயில்லை. பேச்சு மும்முரத்தில் பணமுடிப்பைத் துறவியிடம் அளிக்க மறந்திருந்ததையும் அவன் உணர்ந்தான். எனவே, பக்கத்தே இருந்த அறையொன்றினுள் நுழைந்தான். அங்கேயிருந்த படுக்கையொன்றின் கீழ் பணமுடிப்பைப் பாதுகாப்பாக வைத்தான். துறவிகள் எடுப்பார்கள்தானே என்ற எண்ணத்துடன் தன்நாடு திரும்பினுன்.

மந்திரமாலையை முடித்துவந்த தலைமைத்துறவி தாம் பணமுடிப்பை எடுத்துவைக்கவில்லையே என்று எண்ணினுர். ஆயின் சம்பாஷணை அறையில் பணமுடிப்பைக் காணவில்லை. துறவிகளை அழைத்து விசாரித்தார். யாருமே "காணவில்லை" என்றே கூறினர். கொடுக்கப்பட்ட பணமுடிப்பு சம்பாஷணை அறைமேடையிலிருந்தது. எங்கே போயிருக்கும் என்பது யாருக்குமே புரியாததாகிவிட்டது. வாரமொன்று ஓடியது. சனிக்கிழமை துறவிகள் அறையைச் சுத்தி செய்வதற்காக குறிக்கப்பட்ட துறவிகள் தம் கடமையைச் செய்து கொண்டிருந்தனர். துறவி வியோனிஸுடைய அறைதான் சம்பாஷணை அறைக்கு அருகேயிருந்தது. படுக்கைகளைத் தட்டிச் சுத்தஞ் செய்தபோது 1000 தங்கநாணயப் பணமுடிப்பை அங்கே கட்டில்சட்டத்தின் மறைவில் கண்டனர் துறவிகள். தலைமைத் துறவிக்கு விஷயத்தைக் கூறினர். சிலுவைஅரசரின் சித்தமோ என்னமோ நற்பெயர் பெற்றிருந்த துறவி வியோனிஸ் மேலே சந்தேகம் ஓடியது எல்லோருக்கும்.

வெளி அலுவல்களைக் கவனிக்கச் சென்றிருந்த துறவி வியோனிஸ்திரும்பியதும் விசாரணை செய்யப்பட்டார். பணத்தைத் திருடியதாகவும், ஒளித்து வைத்ததாகவும், வெளியேபோகும் சமயங்களில் அதைத்தமது சிற்றின்பநாட்டங்களைப் பூர்த்திசெய்யப் பாவிக்கத் தயாராயிருந்ததாகவும் அவர்மேல் குற்றச்சாட்டுகள் உருவாகின. வியோனிஸின் நிலையோ பரிதாபத்துக் குரியதாகிவிட்டது. தமது மாசற்றதன்மையை ருசுப்படுத்த எதையாவது பேசலாமோவென எண்ணினுர். சந்நியாசிகள் சபையின்முன் குற்றவாளியாக எல்லோராலும் பரிகசிக்கப்பட்ட நிலையில் நின்றபோது பிலாத்துவின்முன் மௌனமாய்நின்ற யேசுவை நினைத்தார். மௌனங்காத்தார். "இதுதான் நீகேட்ட முள்"என யேசு கூறுவது போலிருந்தது அவருக்கு.

### நெஞ்சில் தைத்த முள் :


மறுத்து வாதாடாமல் மௌனமாய் நின்றதால் சந்தேகங்கள் ஊர்ஜிதமாகின. நித்திய வாக்குத்தத்தம் பெற்றவரானகையால் வியோனிஸைச் சபையிலிருந்து வெளியேற்ற முடியவில்லை. எனவே பலஏக்கர்கள்கொண்ட அந்த ஆச்சிரமத்தின் ஒருமூலையில் சிறு குடிசையில் தனியாக வாசஞ்செய்ய விடப்பட்டார். மிகக் கடினவேலைகள் கொடுக்கப்பட்டன. மற்றத் துறவிகளுடன் அவர் கலந்துகொள்ள முடியாது அவரது பதவிகள் நீக்கப்பட்டு மற்றத்துறவிகட்குக் கொடுக்கப்பட்டன. யாவற்றிலும் மேலாக, "கள்வன், துரோகி, சந்நியாச போர்வையில் சாகஸம் புரிந்தவன்" என்பதுபோன்ற அவமான நிலை.

தனிமையில் கண்ணீரைக் கொட்டினுர். கஷ்டவேலைகளை நன்மனதுடன் தாங்கினுர். யாவராலும் வெறுக்கப்பட்டவராக, மனமுடைந்த நிலையில் வாழ்ந்தார் துறவி வியோனிஸ். இந்த நிலையில் சாத்தானும் அவரைக் [illegible] சோதனைக்குள்ளாக்கினுன். "இன்னும் ஏன் இந்தநிலை. யாரும் காணாது வெளியேறி உலகில் இன்பமாக வாழலாமே" என்பதுபோன்ற நினைவுகள். இத்தகைய நிர்ப்பாக்கிய நிலையில்வாழ்ந்துவந்தார் துறவி வியோனிஸ்.

### முள்ளில் மலர்ந்த ரோஜா :

வருடமொன்று ஓடியது. துறவி வியோனிஸைப்பற்றியே ஓராளவுமறந்துவிட்டிருந்தனர் துறவிகள். அன்று தனுதிகாரி றெஜினேல்ட் வந்திருந்தார். அவ்வருட பணமுடிப்பை அன்பளிப்புச் செய்தபின் துறவி தேவதாஸுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். சம்பாஷணை நடுவே, "மடாதிபதி அவர்களே! சென்றவருடம் நீங்கள் திடீரென்று எழுந்துபோய் விட்டீர்கள். பணமுடிப்பை என்ன செய்வதென்றறியாது அதோ அந்த அறையில் கட்டிலின் சட்டத்தின்கீழ் வைத்தேன். எடுத்திருப்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)




அன்புத் தம்பி - தங்கையருக்கு வணக்கம் !

இந்தக் கார்த்திகை மாதம் உத்தரிக்கிற ஸ்தலத்தில் துன்பப்படும் ஆத்துமாக்களை நினைவுகூர்ந்து மன்ருடவேண்டிய மாதம்.

இவர்கள் எம்மைப்போல இவ்வுலகில் வாழ்ந்தார்கள். தமது சீவியத்தைத் தேவனுக் குகந்ததாக்கும் வேலையில் ஈடுபட்டாலும் அதைப் பூரணமாய் நிறைவேற்றுதவர்கள். இச் சீவியத்தைவிட்டு மறுமைச் சீவியத்திற் பிரவேசிக்கும்பொழுது அற்ப பாவ அழுக்குகளுடனே, பாவத்துக்குப் பூரண பிராயச்சித்தஞ் செய்யாமலோ சென்ருர்கள். அதை இப்பொழுது தீர்க்கிருர்கள். தீர்த்தபின் பரகதி அடைவார்கள்.

நாம் உலகத்தில் இருக்கும்பொழுது எமது செபங்களால், பூசைப்பலி ஒப்புக்கொடுப்பதால், நற்கிருத்தியங்கள் புரிவதால், தபமுயற்சிகளால் ஞானப்பலன்தேடிப் பாவத்துக்குப் பிராயச்சித்தஞ் செய்யலாம். உத்தரிப்பு ஸ்தலத்தில் இருக்கிறவர்களுக்கு இது சாத்தியப்படாது. ஏனெனில், பலன் தேடும்காலம் பறந்துவிட்டது.

ஆகவே, அவர்களது சகோதரர்களாகிய நாம் எமது பலன்களை அவர்களுக்குக் கொடுத்துக் கடனைத் தீர்த்தால் அவர்கள் சீக்கிரம் பரமன் பாதம் சேர்வார்கள்.

இன்றே தொடங்குங்கள். திவ்விய பூசைப்பலி, சற்பிரசாதம், செபமாலை, சிறு ஒறுத்தல்களும், சிறு செபங்களும். "இரக்கம் உள்ளவர் பாக்கியவாளர்; ஏனெனில், அவர்கள் இரக்கம் அடைவார்கள்."

— அண்ணு

## விகடத் துணுக்குகள்

லில்லி: (புதுவருடம் பிறந்து பாடசாலை ஆரம்பமான அன்று பாடசாலைப்பிள்ளைகள் வகுப்பேற்றப் பட்டார்கள். பாடசாலையிலிருந்து வீடு வந்துசேர்ந்ததும் தாயைப்பார்த்து) அம்மா, நீங்கள் ஓர் அதிர்ஷ்டசாலி...

தாய்: என்ன, அதிர்ஷ்டசாலியா! எப்படி மகளே?

லில்லி: இம்முறை நீங்கள் எனக்குப் புதுப்புத்தகங்கள்வாங்கப் பணம் தரவேண்டியதில்லை. சென்ற வருடம் படித்த புத்தகங்களையே இந்தவருடமும் படிக்கச்சொன்னுர் வாத்தியார்.

தாய்: அப்பஉன்னை வகுப்பேற்றவில்லையா?

லில்லி: நான் சொன்னது உங்களுக்கு விளங்கவில்லையா? போன வருடம்படித்த வகுப்பில்தான் இந்த வருடமும் படிக்கட்டுமாம். போன வருடம்படித்த புத்தகங்களைத்தான் இந்தவருடமும் படிக்கட்டுமாம். புதுப்புத்தகங்கள் வாங்கவேண்டாமாம். வகுப்பேற்றினுரோ இறக்கினுரோ எனக்குத் தெரியாது.

தாய்: அட மக்கே......

சீமாட்டி: நீ ஏதோ கவலைப்படுகிற ஓர் ஆள்போல் காணப்படுகிருய். என்ன காரியம்?

வழிப்போக்கன்: நான் அருமையாக வளர்த்த யானை இறந்துபோய் விட்டது அம்மா!

சீமாட்டி: நீ அதனை மிகுந்த பட்சமாக வளர்த்து வந்தாய்போலும். ஐயோபாவம். ஆயினும் இனிமேல் அதையிட்டுக் கவலைப்பட்டுத்தான் என்ன ஆகப்போகிறது?

வழிப்போக்கன்: அதையிட்டு இப்போது அவ்வளவுகவலை எனக்கு இல்லை. ஆனுல், அதை எடுத்துப் புதைக்க வழியின்றித்தான் கவலைப் படுகிறேன்.

* * *

வீட்டு எசமாட்டி: (பிச்சைக்கு வந்தவளைப் பார்த்து) நாடுமுழுவதும் இப்படியெல்லாம் நடந்துதிரிந்து அலைந்துலைந்து பிச்சை எடுப்பதில் உனக்குச் சலிப்புத் தட்டவில்லையா?

பிச்சைக்காரி: தட்டுகிறதுதான்: என்ன அம்மா செய்கிறது! நானும் இப்படியெல்லாம் நடந்துலையாமல் உங்களைப்போல ஒருகார் வைத்துக் கொள்ளலாமென்ருல் ஒருபாதையையும் காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக் கிழமை —

ம. அல்போன்சஸ்

பூமி என்னும் பெண்மயிலாளின் உடலைச் சுற்றியிருந்த இருள் என்னும் போர்வையை மெல்லமெல்லத் தன் ஒளிக்கதிர்களால் நீக்கியவண்ணம் மேலெழுந்தான் கதிரவன்.

உலகமே விழித்துக்கொண்டுவிட்டது. ஆனால் அருள்... அவனால் இவ்வுலகத்தைப் பார்க்கவே வெட்கமாயிருந்தது. நேற்று வெள்ளிக்கிழமை சாயங்காலம் எழுந்த கோபவெறி, வெள்ளம்போல் பெருகிப் பெருகிப் பெருக்கெடுத்து அணைக்கட்டை உடைக்க ஆயத்தமாவதுபோல் அவன் நெஞ்சைப் பிளக்க ஆயத்தமாயிருந்தது.

டக்...டக்... மெல்லக் கதவு தட்டப்படும் ஓசையைத் தொடர்ந்து, அது திறக்கப்படுகிறது. உள்ளம் உருகும் வேதனையால் எழுந்த கோபவெறி ... அதனை அப்படியே பிரதிபலிக்கும் அருளின்முகம் தலை அணையுள் புதைந்து கிடந்தது. மென்மையான இருபாதங்கள் அன்னம்போன்று அடியெடுத்து வைத்து உள்ளேவருகின்றன. கண்கள் நோக்காவிடினும் வருவது தன் அன்புத் தங்கைதான் என்பதை அவள் தினமும் தேய்த்துக் குளிக்கும் சந்தன வாசனையின்மூல மறிந்துகொண்டான்.

''அண்ணா!...... எழும்புங்கண்ணா.'' உயிரற்ற உடல்போல் அவன் அசையவே இல்லை. ''என்னண்ணா! இன்னுமா தூக்கம்; சின்னக்குழந்தைமாதிரி. கோப்பி ஆறிப்போகுதண்ணா.'' பாசத்தின் பிரதிபலிப்பால் எழுந்த தன் அன்புத் தங்கையின் இனிய குரல் தேனருவிபோன்று அவன் செவிகளில் பாய்ந்தும் அவன் உயிரற்ற சடப்பொருள் ஆகிவிட்டானா?

''அண்ணா!'' இப்பொழுது துயரத்தின் எல்லையில் இருந்து ஒலித்தது மேரியின் குரல். அவள்நெஞ்சம் திக்... திக்... என்று பயத்தால் ஏங்கியது. தன் அருமை அண்ணனுக்கு ஏதோ என்னவோஎன்று படபடத்தது அவள் மென் உடல். அழகிய தன் இளம் துளிர்க்கரத்தால் அண்ணனின் பரந்த நெற்றியைத் தொட்டுப்பார்த்தாள் மேரி. மல்லிகைச்சரம்போன்ற தன் தங்கையின் கரம்பட்டதும் எழுந்த சகோதரபாசத்தின் ஸ்பரிச உணர்ச்சி அருளை ஒருகணம் திணறவைத்தது என்றாலும்... அவள் கையை உதறித் தள்ளிவிட்டு திடுமென எழுந்திருந்த அருளின்பார்வைகண்டு படமெடுத்தாடும் நாகபாம்பின்முன் நிற்பதுபோல் நடுங்கினாள் மேரி.

தாயை இழந்த மேரிக்குச் சிறுப்பந்தொட்டுத் தாய்ப்பாசத்தை அள்ளிச் சொரிந்த அண்ணனின் பார்வையா இது. தன் ஒரே தங்கையின் அழகை எண்ணி எண்ணித் தன்னுள்ளேயே பெருமையடித்துக்கொண்டு அவள் கேட்டதையெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுக்கும் அண்ணனின் பார்வையா இது!

கடுகளவு தன் தங்கை முகம் வாடினாலும் கலங்கிப்போகும் அருளா இப்படி ......!

''என்னண்ணா இது, நான் ஏதும் தப்புப்பண்ணியிற்றேனா? சொல்லுங்கண்ணா, ஏன் இப்படிப்பாக்கிறீங்க...'' மேரி உள்ளம் உருக இப்படிக்கூறி முடிப்பதற்குள்ளே... அருளின் உரம்பெற்ற கரங்கள் பளார்! பளார்! என அவள் உடலைப்பதம்பார்த்தன. ''அண்ணா என்னை அடிக்காதேயண்ணா.'' புழுப்போல் துவண்டு விழுந்தாள்மேரி. அருளின் கண்கள் கசிந்தன. ஆனால், நேற்று வெள்ளிக்கிழமை இதைவிடப் பரிதாபமாக வெட்கத்தால் துவண்டு விழுந்தானே அருள். அந்தவேதனை...!

* * *

''டேய்! டேய் அருள்.''

''கலோ! போல் என்னடா எல்லோரும் சந்தியில் சேர்ந்தாப்போல் நிக்கிறீங்க.''

''எல்லாம் விசயமாத்தாண்டா.'' போலின் அலட்சியமான பதில்.

''இண்டைக்கு வெள்ளிக்கிழமை. கோவிலில் புனிதர் யூதாததேயுவிற்கு ஆராதனை நடக்குது. வெளியில் நிக்கிறீங்களே, உள்ளபோனா என்னடா?'' அருளின் அடக்கமானகேள்வி. ''டேய் மடையா உள்ளே போகச்சொல்லி எங்களைச் சோதனைக்குள்ளாக்கப் பாக்கிறாயா?''

றாபன், ஓர் ஏளனச் சிரிப்புடன் கூறினான்.

''நீ என்னடா பேசினாய் றாபன்.'' றாபனைச் சுட்டெரிப்பதுபோல் இருந்தது அருளின்தொனி. ''உனக்கேன்டா கோபம்வருகுது.

''டேய் இப்ப கோயிலுக்கு வருகிற பெட்டைக்குஞ்சுகளெல்லாம் ஆண்டவனை வழிபடவா வருகுதுகள். இல்லையடா, தங்கள் அழகைக்காட்டத்தான்.''...றாபன் கொஞ்சம் திமிரோடு தான் பதிலளித்தான்.

''உண்மைதான் அருள். கோவிலுக்குவரும்போதாவது அடக்க ஒடுக்கமான உடையணிந்து வருகிதுகளா? சில பெண்களைப் பார்க்கவே கண்கூசுதடா?'' இருவருக்கும் நடுத்தீர்ப்பது போல் இருந்தது போலின் இக்கூற்று.

இப்போது யாழ்ப்பாணத்தில் புனிதர் யூதாததேயுவின் பக்தி மக்களிடையே அதிகரித்துக்கொண்டு வருகிறதென்பதைப் பிரதி வெள்ளிக்கிழமையும் சந்தியோகுமையோர் ஆலயத்திற்குவரும் சனக்கூட்டத்தைப் பார்த்தாலே புரிந்துவிடும். முக்கியமாகப் பெண்கள். ஆராதனை முடிந்துவிட்டது, மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கும் வரங்கள் கிடைத்துவிட்டதுபோல் ஒருவித புதுமலர்ச்சியை அவர்கள் முகத்தில் காணமுடிகிறது.

''டேய்! அருள், அந்தப் பெண்கள் கூட்டத்தைப் பாரடா; அரையாரில் தான் உடைதைத்திருப்பாங்க போலிருக்கு.'' மிக ஆவலோடு பார்த்தவண்ணம் கூறினான் றாபன்.

''றாபன் அவங்களுக்குப் பின்னால பாரடா... அந்த நீலச்சட்டை, இயற்கையிலேயே தனியழகு. இந்த அழகோடு... சீ, கேவலமான உடுப்படா. இவ்வளவு அழகானபெண் இப்படி அசிங்கமாய் உடுத்தியிருக்கிறாளே.'' போல் அந்த நீலச்சட்டையணிந்த பெண்ணின் அழகை ரசித்தான். ஆனால் கையும்கழுத்துமில்லாத அவள் உடுப்பு அவனுக்கு வெறுப்பைக் கொடுத்தது.

''இவள் என்ன பரீஸ்பட்டணத்தில் இருந்து வந்திருக்கிறாளா? நமது தமிழ்ப்பண்பெண்டா! தமிழ்த்தாயைத் தலைகுனிய வைக்கிறார்களே இன்றைய பெண்கள்குலம்.'' போலின் வாய்மீண்டும்முணுமுணுத்துக்கொண்டது. ''டேய் முட்டாள் வாயைமூடடா; அதுஅருளின் தங்கையடா'' மிக அவசரமாகக் காதோடுகாதாகக் கூறினான் றாபன். அருளின் இரத்தம் கொதித்தது. வேதனையால் வெதும்பினான். அதற்குப்பின் அவன் அங்கு நிற்கவேயில்லை. எப்படித்தான் அவனால் நிற்கமுடியும்?

* * *

''காரணம் கேட்டாயே, இப்போது புரிகிறதா? பாவி என்கண்முன் நிற்காதே போய்விடு.'' அருளின் ஆத்திரம் இன்னமும் அடங்கவேயில்லை. ஆயினும் தன் நேசத்தங்கையை அடித்துவிட்டேனே என்று துடியாய்த்துடித்தான். அவன் தலை சுற்றியது, சிந்தனையும் சுழன்றது. ''இதுவரை காலமும் நான் சொல்லிய எதையும் என் தங்கை தட்டியதே இல்லை. அப்படியானால் அவள் உடைகளைக் கவனித்து ஒரு வார்த்தைகூட அவளிடம் கூறவில்லையே. நான் தவறிவிட்டேன். நான்தான் குற்றவாளி...அவன் மனச்சான்று அவனுக்கு வலியுறுத்தியது.

மறுபுறம் கட்டிலில்கிடந்துகொண்டு அழுதாள் புலம்பினாள், அண்ணனை— என் அன்பின் தமிழ்த்தாயை வேதனைப்படுத்திவிட்டேனே; இறைவனின் இல்லத்திற்கு இழுக்கைத் தேடிவிட்டேனே; என்றெல்லாம் மேரியின் நெஞ்சம் வெதும்பிவெடித்தது. மேசையில் இருந்தபடத்தை மீண்டும்மீண்டும் பார்த்தாள். அதில் அந்தப் பாவிப்பெண் யேசுவின் பாதத்தைக் கண்ணீரால் கழுவிக்கொண்டிருந்தாள். ''ஆம் நான் பாவிதான், பார்ப்பவர்கள் நெஞ்சில் சலனத்தை ஏற்படுத்திய என் உடை... ஆம் நான் பாவியேதான்.'' இப்படியாக எண்ணி அழுது அழுது ஒருமுடிவிற்குவந்துவிட்டாள் மேரி.

* * *

''அண்ணா!''...கண்களில் நீர் பொங்கிவழிய அருளின் முகத்தைப் பார்க்கவேபயந்து குனிந்தபடியே வந்தாள் மேரி.

எப்பொழுதும் சிரித்த முகத்துடன் அண்ணா அண்ணா என்றுவரும் தன் அன்புத்தங்கையை இப்படிக் கண்ணீரும்கம்பலையுமாய் இதுவரையும் அருள் கண்டதேயில்லை.

''மேரி!'' துன்பச் சிலையானான் அருள்.

''என்னை மன்னித்துவிடுங்கள் அண்ணா, சொல்லுங்கண்ணா! உங்கள் தங்கையை மன்னிக்கமாட்டீர்களா?''

''மேரி! என்னைக் கொல்லாமல் கொல்லுகிறாயேயம்மா.'' பாசத்தின் மறுகுரல். ''இந்தாருங்கள் அண்ணா என் உடைகள்; இவற்றுடன்சேர்த்து என்னையும் எரித்துச் சாம்பலாக்கிவிடுங்கள் அண்ணா. இறைவனின் இல்லத்திற்குப் பங்கம்விளைவித்த இந்த உடலும் உடையும் அழிந்துபோகட்டும்.''

''மேரி! என் அன்புச்செல்வமே''... இதற்குமேல் அவனால் எதையுமே கூறமுடியவில்லை. அப்படியே அன்பொழுக அள்ளி அணைத்தான் தன் அன்புத் தங்கையை.

---

❁ உலகின் முக்கியமான ஐந்துசமயங்களையும் சேர்ந்தவர்களில் 95கோடி கிறிஸ்தவர்களும், 44கோடி முஸ்லிம்களும், 35கோடிபௌத்தர்களும், $34\frac{1}{2}$கோடி இந்துக்களும், 34கோடி கொன்பியூசியனிஸ்தர்களும் இருக்கிறார்கள் என்பது தெரியுமா?

❁ ஆபிரிக்காவிலேசியெரலெயோன் நாட்டில்வாழும்மக்களில் ஒவ்வொரு ஆயிரம்பேருக்கும் 48பேர்வீதம் குஷ்டரோகம் எனப்படும் தொழுநோய் கண்டு வருந்துகிறார்கள் என்பது தெரியுமா?

---

# கவலைகள் மாற்றும் கனகமணி மாலை

[எஸ். எம் ஜே.]

வேதசாட்சிகளான புனிதர்களுக்கு ஒவ்வோர் அடையாளம் கொடுக்கப்படுகிறது. புனித இராயப்பருக்குச் சிலுவையும், புனிதசின்னப்பருக்கு வாளும், புனித ஸ்ரீபனுக்குக் கற்களும், புனித செபஸ்தியாருக்கு, அம்புகளும் சின்னங்களாகும். வேதசாட்சிகளின் இராக்கினியாகிய மரியாளுக்கு இரண்டு அடையாளங்கள் தரப்படுகின்றன. பரிசுத்த கன்னிமரியம்மாளின் வேதசாட்சியத்துவத்தின் ஒரேகருவியான கிறிஸ்துநாதரை அவளுடைய கரங்களில் ஏந்தியவண்ணம் இருக்கிறாள். அது ஓர் அடையாளம். தேவதாயார் இவ்வுலகில் அனுபவித்த பாடுகளின் அடையாளமாய் விளங்குவது வாளினால் ஊடுருவப்பட்ட அவளுடைய மாசற்ற இருதயம். அது இரண்டாவது அடையாளமாகும்.

எமது தேவ அன்னையுடன் அன்னியோன்னியமாகக் கலக்கவேண்டுமானால் அவளுடைய இருதயத்தை நன்கு அறியவேண்டும். புனித லூக்காஸ் தமது சுவிசேஷத்தில் குறிப்பிடுவதுபோல அந்த மாசற்ற இருதயத்துக்குள்ளே கிறிஸ்துநாதருடைய சீவியத்தினதும், தேவஅன்னை தமது சீவியத்தினதும் பரமஇரகசியங்களை வைத்திருந்தாள். அந்த இரகசியங்களை நாம் எல்லோரும் ஊடுருவி ஆராயவேண்டும்என்று தேவஅன்னை மிகவும் ஆசிக்கிறாள். தேவ அன்னையின் இருதயத்தின் இரகசியங்களை நாம் அறிவதற்கு இலகுவான வழிஒன்றை அவளேகாண்பித்தும் இருக்கிறாள். இந்த இலகுவானவழி திருச்செபமாலையாகும் நாம் அனுதினமும் செபமாலை செபிக்க வேண்டுமென்று தேவஅன்னை மிகவும் வலிந்து கேட்பதற்கும் காரணம் அதுவே. அந்த இருதயத்தில் மறைந்திருக்கும் அன்பையும் தியாகத்தையும் கண்ணாடிபோல் எங்கள் இருதயங்களிலும் பிரதிபலிக்க வேண்டுமென்பது தேவஅன்னையின் ஆசையாகும்.

செபமாலையில் வியாகுல காரணிக்கங்களை நாம்தியானிக்கும்போது தேவதாயின் இருதயம் அனுபவித்த வியாகுல விதனங்களை ஓரளவு நாம்அறிந்து கொள்ளலாம். ''யேசுவின் உடலிலே ஏற்பட்ட அத்தனை காயங்களின் வருத்தங்களும் தேவஅன்னையின் இருதயத்தில் வேதனை கொடுத்தன'' என்று பல நூற்றாண்டுகளுக்குமுன் புனிதர்சொவ்ரேனியஸ் என்பார் கூறியிருந்தார். ''கிறிஸ்துநாதர் பட்ட கசையடி ஒவ்வொன்றும் தேவதாயாரின் இருதயத்தை நோகச் செய்தது; அவருடைய சிரசில் அழுத்தப்பட்ட முள்முடியின் ஒவ்வொரு முள்ளும், அவருடைய கைகளையும், கால்களையும், துளைத்த ஆணிகளும் நம் தேவஅன்னையின் இருதயத்தை ஊடுருவின; அடிகள் எல்லாம் அவளது இருதயத்தை அதிரச்செய்தன'' என்று மேலும் அப்புனிதர் கூறுகிறார். ''கிறிஸ்துநாதர் சுமந்த சிலுவையும், அவரை அறைந்த ஆணிகளும் தேவதாயாரையும் சேர்த்து அறைந்ததைபோல அவளுடைய இருதயத்தைத் துயரப்படுத்தியது'' என்று புனித அகுஸ்தீனார் கூறுகிறார். ஆம், தேவதாயாரும் கல்வாரிக்குன்றிலே சிலுவையில் அறையப்பட்டார் என்றுதான் நாம் கொள்ளவேண்டும். மைந்தனின் பாடுகளைக்கண்டு வேதனைக்கடலில் மூழ்கிய தேவஅன்னையின் மாசற்ற இருதயம் எவ்வளவு துன்பங்களைச் சுமந்தது என நம்மால் ஊகிக்கமுடியுமா?

நாம் எமது பெலவீனங்களினால் தேவஅன்னையின் இருதயத்தைப் புண்படுத்தும் பாவங்களைச் செய்திருப்போமானால், அதனால் நம் அன்னை அடைந்த துன்பங்களையெல்லாம் நமது மனஸ்தாபத்தினாலும், நல்லமனதோடு நாம் செய்யும் பரிகாரக் கிரிகைகளினாலும் மீண்டும் நீக்கி ஆறுதல் கொடுக்கலாம். துக்கங்களையும், பிரலாபங்களையும் மாற்றித் தேவஅன்னைக்குச் சாந்தியுண்டாக்குவோமாக. எங்கள் இருதயங்களைத் தேவஅன்னைக்கு அர்ப்பணித்து, செபமாலைகாட்டும் நல்வழியினை நாம் கடைப்பிடித் தொழுகுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுகேகொடை புனிதவளனார் குருமடத்துப் பரிசளிப்புவிழா

கொழும்பு, நுகேகொடையிலுள்ள அமலோற்பவ பரித்தியாகசபையினரின் புனிதவளனார் குருமடத்துப் பரிசளிப்புவிழா சென்றமாதம் 28-ந் திகதி பிற்பகல் 3மணிக்கு மிகவும் விமரிசையாக நடந்தேறியது. அத்தருணத்தில் திரு. பி. சவரிமுத்து, எம்.ஏ. தலைமைவகித்தார். திருமதி கிறேஸ் சவரிமுத்து பரிசில்களை வழங்கினார். அக்குரு மடத்துச் சிரேஷ்டராகிய வண. அன்றாபீற்றர்பெர்ணாந்து, O.M.I. தமது வருடாந்த அறிக்கையில் "குருத்துவ அழைத்தல்" தற்போது இலங்கையில் விசேஷமாகக் குறைந்துவருவதை மிகவும் விசனத்துடன் சுட்டிக்காட்டினார். இச்சூழ்நிலையில் பொதுநிலையினர்தாமே குருத்துவ அழைத்தலை அதிகரிக்க உதவிசெய்யவேண்டுமென்றும், குருக்களின் வேலையைக் கூடுதலாக அவர்களே கையேற்றுப் பணிபுரியவேண்டுமென்றும் மிகவும் பரிவாய்க் கேட்டுக்கொண்டார். சிறுவயதிலேயே சிறுவர்களைத் தேவ அழைத்தலுக்குத் தயார்செய்வது பெற்றோரின பாரியகடமையாயிருக்கிறது என்றும் வற்புறுத்திக்கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் அங்குள்ள மாணவர்கள் தங்கள் கல்வித்துறை, விளையாட்டுத்துறை, நாடகத்துறை, வானொலி நிகழ்ச்சிகள், கல்விச்சுற்றுப்பிரயாணம், தேர்ச்சிக்கழகங்கள் ஆகியனவற்றில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் எடுத்துவிளக்கினார்.

இக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய பி. சவரிமுத்து தமது பேருரையில் குருமாணவர்களின் கடமைகளை நன்கு விளக்கினார். **"சேவை"** என்பதே ஒரு குருவானவரின் குறிக்கோளாக இருக்கவேண்டுமென்று கூறினார். இறைவனுக்குச்சேவை, நாட்டுக்குச் சேவை, திருச்சபைக்குச்சேவை, மக்களுக்குச்சேவைஎன்று சுயநலமற்ற சேவையின் பலதரப்பட்ட அம்சங்களைக்குறிப்பிட்டார்.

பரிசில்கள் வழங்கப்பட்டபின் மாணவர்களால் நடாத்தப்பட்ட கதம்ப நிகழ்ச்சிகளுடன் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

(எமதுநிருபர்)

## புதிய சமாதான நீதவான்

மாதகலைச்சேர்ந்த பிரமுகர்களில் ஒருவரும், பலவருடகாலம் ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்து இளைப்பாறியவருமான திரு. சீமாம்பிள்ளை பீற்றர் அவர்களின் கல்வித்தொண்டையும் சமூகதொண்டுகளையும் பாராட்டுமுகமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்குப் புதியசமாதானநீதவானாக நியமனஞ்செய்யப்பெற்றுச் சென்றமாதம்29 ஆம்திகதியன்று யாழ்ப்பாண மாவட்டநீதிபதி ஜனாப்இசடீன் மகமத் இஸ்மாயில் அவர்கள்முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்திருக்கின்றார். இவர் தமது 40வருட ஆசிரியசேவைகாலத்தில் மாதகல், அனுராதபுரம், கந்தானையாகிய இடங்களிலுள்ள கத்தோலிக்கு ஆங்கிலகலாசாலைகளின் தலைமையாசிரியராகவும், 17வருடகாலம் இளவாலைக் கன்னிகாமடத்து ஆசிரியபயிற்சிக்கலாசாலைப் பேராசிரியராகவும், கடைசியாகப் பண்டத்தரிப்பு மகளிர்உயர்தரஆங்கில கலாசாலை ஆசிரியராகவும் கடமையாற்றி மாணவர்களதும், ஆசிரியர்களதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். காலஞ்சென்ற மாதகல் வைத்தியர் சி. மேரியோசவ், காலஞ்சென்ற வண. பிதா எஸ். ஏ. பெஞ்சமின் இவரின் சகோதரர்என்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

# திருச்சபையின் மலர்ச்சியும் மக்களின் கிளர்ச்சியும்

## திருச்சபையின் மறுமலர்ச்சிப் போக்கு

(சென்றவாரத் தொடர்ச்சி)

நாம் இன்னும் ஆழமாகச் செல்லலாம். திருச்சபையை இன்று மானிட உண்மையுடன் நேசிப்பதில் எடுக்கவேண்டிய பிரயாசை குறைந்துகொண்டுபோகின்றது. இன்று திருச்சபை அளிக்கும் தோற்றம் விரும்பத்தக்கதே அன்றிப் பரிதாபமானதும் கண்டிப்புக்குரியதுமல்ல. உலகமடங்கலும் திருச்சபையில், தற்போது உண்மையின் உத்தானத்தையும், கிறிஸ்தவனின் உயிருள்ள மறுமலர்ச்சியையும் புனிதத்துவத்தையும் காணக்கூடியதாய் இருக்கின்றது. இப்புனிதத்துவம் வழமையானதும் ஆழமற்றதுமல்ல. விரும்பினால் மற்றையகாலங்களுடன் ஒப்பிடும்பொழுது இதுதனிப்பட்டது என்பதை அறிக்கையிடக் கூடியதாகின்றது. அத்துடன் இது கூடிய ஒன்றிப்புடன் செயல் புரியக்கூடியது. இன்று திருச்சபை வத்திக்கான்சங்கத்தின் உதயத்திலிருந்து தனது உள்ளாந்தரங்கத்தை நெறிப்படுத்தும் பக்கமாக நாடி இருக்கிறது.

செபங்களும் வேதசத்தியங்களும் திருச்சபைக்கு முறையாக ஞானவெளிச்சத்தைக் கொடுத்து, ஞானவாழ்வையும் உண்மை உணர்ச்சியையும், நிறைவையும், கடவுளோடு சம்பாஷித்தல்மூலம் பெற்றுக்கொடுக்கிறது. இப்படியாக ஒவ்வோர் ஆத்துமத்தின் உள்ளாந்தரங்கத்திலிருந்து, ஒரேகுரலுடன் தேவதிரவிய அனுமானத்தின் பரம இரகசியங்களைத் திருவழிபாடு மூலம் திருச்சபை வெளிப்படுத்துகின்றது. இன்று ஒவ்வொரு மேற்றிராசன மேற்றிராணிமார், திருச்சபை அதிகாரிகளின் சங்கங்கள், சந்நியாசசபைகள் யாவும் உண்மையான ஆழமான கத்தோலிக்க மறுமலர்ச்சிப் பாதையிற் செல்கின்றது. அத்தோடு விசுவாசிகளில் ஒவ்வொரு அங்கத்தவரும் பரிசுத்த தனத்திற்கும், ஒவ்வொரு பொதுநிலையினர் அப்போஸ்தொலிக்கத் தொண்டிற்கும், குருத்துவத்தொகுதியினர் திருச்சபையின் வேலைக்கும் பொறுப்புடன் கடமையாற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு மனச்சாட்சியும் வேதப்பரப்புதலுக்கு வேண்டியவற்றை எதிர்நோக்கியுள்ளது. முழுத்திருச்சபையும் கத்தோலிக்க போக்கிற்கும் அதன் ஒற்றுமை உணர்வுக்கும் அழைக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் பிரயாசையுள்ளதும், அத்தோடு பிரமாணிக்கம் சத்துவம் நிறைந்த கிறிஸ்தவ ஐக்கியத்தை உருவாக்கி, கத்தோலிக்கர் தமது வாழ்வைச் சீர்ப்படுத்திப் பிரிந்துநிற்கும் எமது சகோதரர்களுடன் உவப்புடன் சல்லாபிக்கவேண்டிய நிலையை அடைந்துகொள்ளவேண்டும்.

இன்று திருச்சபையானது தனது ஆரம்ப நினைவுகூருதலையும் அதன் உண்மை உயிரையும் உணர்கின்றது. திருச்சபை உலக மக்கள்மட்டில் மதிப்பும், கூடியதொடர்பும் கொண்டுள்ளது. இதனால் பொருத்தமான குருத்துவப் பணிமூலம் யாவரையும் இரட்சிக்க வேண்டிய வெளிச்சத்தையும் தருணத்தையும் அளிக்கின்றது. தற்போது திருச்சபை மறுஉலக நித்தியவாழ்வை நாடிச்செல்லும் யாத்திரையிற் கண்ணோட்டம் செலுத்துவதினால், தரித்திரம சுவீகாரம் தைரியம முதலியவற்றை அடைகின்றது. இது நீங்கள் விரும்பினால், முன்னே கிறிஸ்துவின் உத்தானத்திற்குச் சாட்சிபகர்ந்த காலத்திற்கும, உண்மையான உலக நம்பிக்கை அளிக்கும் பாதுகாப்பிற்கும், வல்லபத்திற்கும், ஊற்றுயுள்ள உன்னதமான விசுவாசத்திற்கு, உங்களை அழைத்துச்செல்லும். இன்று திருச்சபை தனது தேவையற்ற உலகத்திற்கடுத்த கறைகளைத் தூய்மைப்படுத்தி வருகிறது. அது உலகத்திற்குப் போதித்து உண்மையான சகோதர ஒற்றுமை, வல்லமை, ஒழுக்கம் முதலியவற்றைப் பொழிகின்றது. இதனால் படைப்பின் வெவ்வேறு உண்மைகளையும் நிறைவையும், சுதந்திரம், ஒற்றுமை சமாதானம் நிறைந்த சீவியத்தின் இன்பத்தையும் பெற்றுக்கொடுக்கும் இயல்பைக்கொண்டுள்ளது.

## இந்நேரத்தில் புரியவேண்டிய கடமை

திருச்சபையை நேசியுங்கள், எனது அருமையான புத்திரர்களே! இத்தருணத்தில் நீங்கள் புரியவேண்டிய கடமை இதுதான். திருச்சபையை மதித்து அதிற்சேர்ந்துள்ளோம் என, ஆனந்தம் கொள்வதே திருச்சபையை நேசித்தலாம். திருச்சபைக்கு அமைந்து சேவைசெய்து, பிரயாசை நிறைந்த வேதப்பரப்புதற்பணிக்கு விருப்புடன் பலிசெய்வதே இதன்கருத்து. இன்னும் திருச்சபை நாம் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இருந்து, நேர்மையோடும், உதாரகுணத்தோடும் எம்மை ஆட்கொண்டு சூழ்ந்துள்ள உயிருள்ள படைப்புக்கள்மட்டில் உறவாக வேண்டுமென்றும் கேட்டுநிற்கின்றது. உதாரணமாகக் குடும்பம் சமூகம் உண்மை நீதி சுதந்திரம் நன்மைத்தனம் இவையாவற்றையும் கருத்திற்கொண்டு அருமையான புத்திரர் புத்திரிகளே! நாம் எமது அப்போஸ்தொலிக்க ஆசீரை உங்களுக்கு அருளுகின்றோம்.

## உன்னை ஒன்று....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பீர்கள் தானே. அப்படியான ஒருகஷ்டத்திற்கு என்னை ஆளாக்காமல் முதலில் பணமுடிப்பை எடுத்துவைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டு வாருங்கள்" என்றார். துறவி தேவதாஸ் திகைத்தார். "என்ன! நீரா அங்கே வைத்துவிட்டுப் போனீர்"? என்றார். "ஏன், பணம் கிடைக்கவில்லையா ?......" என்றுகேட்டார் றெஜினேல்ட். "இல்லை, கிடைத்தது" என்று கூறியவர் கண்களில் நீர்பெருகியது. சமாளித்துக்கொண்டே றெஜினேல்ட்டை அனுப்பிவைத்தார்.

துறவிகள் அனைவோரையும் கூட்டினார். விஷயத்தை விளக்கினார். துறவி லியோனிஸின் மாசற்றதன்மை வெளியாயிற்று. தலைமைத்துறவி உட்பட எல்லோரும் மனம்நொந்தனர். துறவி லியோனிஸிடம் மன்னிப்புக்கேட்டு அவரை அழைத்துவர ஓட்டமும் நடையுமாகச் சென்றனர் அவர்வசித்த குடிசையை நோக்கி. அங்கே அவர்கள் கண்டகாட்சி என்ன ?... மூன்று நாட் சுரத்தில், கட்டாந்தரையில் துறவி லியோனிஸின் சடலம் உயிரற்ற நிலையில், காங்குவித்தவாறு மலர்ந்த முகத்துடன் காட்சியளித்தது. ஆம், அன்பர் அளித்த முள்ளின்மேல் மோகன ரோஜாவாகப் பரலோக நந்தாவனத்தில் மலர்ந்திருந்தார் துறவி லியோனிஸ்.

● சந்திரனில் மனிதனை இறக்குவதற்கென நடத்தும் பலவித ஆராய்ச்சிகளுக்குமாகக் கடந்தபத்துவருடங்களிலும அமெரிக்கா 2,380 கோடிடலர் அதாவது 1,000 கோடிபவுண செலவு செய்திருக்கிறது. அதன்பலனாக அடுத்தவருட ஆனிமாதத்திலே இருவிண்வெளி வீரரைச் சந்திரனில் இறக்குவதற்கான முயற்சியில அதி தீவிரமாக ஈடுபட்டுவருகிறது.

**இறை ஆவிவருகையின் 23-ம்ஞாயிறு**

## திருச்செய்தி

[மத். 9: 18—26]

**"மகளே! நம்பிக்கையுடன் வாழ்; உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது"**

### யேசுதேவன் இறந்த பெண்ணின் கரத்தைத் தொட்டதும் அவள் எழுந்திருந்தாள்

யேசு நாதர் போதஞ் செய்கையில்
ஆசை யோடே அதிபதி ஒருவன்
அவரிடம் வந்து ஆரா தித்து
'ஆண்டவ! என்மகள் ஐயோ இறந்தாள்
ஆண்டுநீர் வந்து அவளைத் தொட்டால்
அட்டியே யில்லை அவளுயிர் பெறுவாள்'
என்றே யிரந்து யேசுவை வேண்டினன்.
பெருமான் யேசுவும் பேசா தெழுந்து
தெருவழி நடந்து செல்கையி லொருத்தி
பல்லாண் டாகப் பெரும்பா டுள்ளாள்
போதக ருடையினைத் தொட்டனள் யேசுவும்
'மகளே நீயும் மகிழ்வாய்; உனது
அகவிசு வாசம் அகற்றிடும் நோயினை
நம்பிக்கை யாக நாளுமே வாழ்வாய்'
என்றதும் பெண்ணின் இன்னலுந் தீர்ந்தது.
அதன்பின்,
அண்ணல் யேசுவும் அதிபதி வீட்டினை
அடைந்ததும் சாப்பறை அடிப்பதும் அழுவதும்
அறிந்தன ராயினும 'அவளுயிர் விடவில்லை
அறிதுயில் கொள்ளுகிறாள்' என்றனர் யேசு.
கேட்டவர் நகைத்தார் கேலியுஞ் செய்தார்
வீட்டினுள் சென்று விருப்புடன் சவத்தின்
கையினைத் தொடவே பெண்ணுயிர் பெற்றாள்
இப்பெரும் புதுமையைக் கண்டவர் போற்றினர்
ஒப்புறப் பரப்பினர் ஊரெங் கணுமே.

### பிரார்த்தனை

இறைவா,

நித்திய மரணத்திலிருந்து எம்மை உயிர்ப்பித்தருளும்; உமது பாத பங்கயம் உரித்தென அணைந்தோம். உம் அருள் விளிப்பிலாவது உறுதியாய் நடக்க உறுதுணை தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## முதலிடம் பெற்றது

யாழ்ப்பாணத்திலே அண்மையில் நடைபெற்ற சாரணர் ஜம்போறி அணி வகுப்பில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார்கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது. அதனால் இக்கல்லூரிச் சாரணருக்கு ஒருவெள்ளிக்கேடயம் பரிசிலாக வழங்கப்படலாயிற்று.

## புதிய அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணப் புதிய அரசாங்கஅதிபராக நியமனஞ்செய்யப்பெற்ற திரு. எவ்.சி.பீற்றேர்ஸ் சென்ற 1-ம்வ யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து மறுநாள் 2ஆம் திகதிமுதல் கடமைபார்க்கத் தொடங்கினர். இதுவரை யாழ்ப்பாண அரசாங்கஅதிபராயிருந்துவந்து புதிய போஸ்ற்மாஸ்றர் – ஜெனறலாக நியமனஞ்செய்யப்பெற்ற திரு. வேர்ணன் அபயசேகரா அன்றுதினமே விமான மூலம் கொழும்புசென்ருர்.

## சக்தியற்ற மருந்துகள்

யாழ்ப்பாண அரசினர்பெரியஆஸ்பத்திரியிலே தற்போது உபயோகமாகும் பலமருந்துவகைகள் நெடுநாள்சென்றுவிட்டகாரணமாகச் சக்தியற்றுப்போய்விட்டனவென்றும், அவைகளை நோயாளருக்குக் கொடுப்பதால் பயனற்றுப் போய்விடுகிறதென்றும் டக்றர்மார் வைத்தியஅதிகாரிகளுக்கு முறையீடுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

## மூன்ருவது சாதிகசம்பத் சுவீப்

சாதிகசம்பத் மூன்ருவதுசுவீப் திக்கெற்விற்பனை சென்றஞாயிற்றுக்கிழமைகாலியில் ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ளது. உள்நாட்டுமந்திரி டக்றர் டபிள்யு. தஹநாயக்கா முதலாவதுதிக்கெற்றை வாங்கி அதனை ஆரம்பித்துவைத்தார். நாட்டிலே விவசாயத்தை ஊக்குவிக்கும்வகையில் லொறிகள், டிருக்றர்கள், ஜீப்புகள், மற்றும் மீன்பிடிவள்ளங்களுக்கான மோட்டார்கள் முதலியனவும் இம்முறை பரிசில்களாக வழங்கப்படும்.

## மீன்பிடிபகுதி உதவிஅதிபர்

யாழ்ப்பாண மாவட்ட உதவிஅரசாங்கஅதிபர் திரு.ரி.முருகேசம்பிள்ளை வடபகுதி மீன்பிடிபகுதி உதவிஅதிபராக நியமனம்பெற்றுள்ளார். இவர் தமது உதவிஅரசாங்க அதிபர்பதவியுடன் இப்புதிய பதவியையும் வகிப்பார். இவர் கடந்ததைமாதமுதல் வடபெரும்பாக கடற்தொழில் ஆலோசனைச்சபைத் தலைவராகக் கடமையாற்றி வருகின்ருர்என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## சிமெந்தில் சுயதேவை

1972ஆம்ஆண்டிலே இலங்கை சிமெந்துச்செய்கையில் சுயதேவையைப் பூர்த்திசெய்யுமென்று சிமெந்துக் கூட்டுத்தாபனம் அறிக்கையிட்டிருக்கிறது. அதாவது இலங்கையிலுள்ள சிமெந்துக்கூட்டுத்தாபனத்தின் மூன்றுசிமெந்துத் தொழிற்சாலைகளும் நாட்டின் சிமெந்துசுயதேவையைப் பூர்த்திசெய்யும்.

## யாழ்ப்பாணம் முதலிடம்

இலங்கையில் கூடியதொகையாக மீன்பிடிபபதில் கடந்தபலவருடங்களிற்போலவே இவ்வருடமும் முதல்ஸ்தானம் வகித்திருக்கிறது. இரண்டாவதுஸ்தானத்தைக் கல்பிட்டியும், மூன்ருவதுஸ்தானத்தை முல்லைத்தீவும, மட்டக்களப்பும், நான்காவதுஸ்தானத்தை நீர்கொழும்பும், மன்னரும் வகித்திருக்கின்றன.

## தராதரப்பத்திரங்கள்

ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தியடைந்துள்ள சுமார் 3,25,000மாணவர்களுக்கும், மற்றும் உயர்தரவகுப்புகளில் சித்தியடைந்த சுமார் 20,000மாணவர்களுக்கும இன்னுமே கல்விப்பகுதி தாரதப்பத்திரங்கள் வழங்கவில்லை. அவைகளை விரைவிலே வழங்குவதற்கான ஒழுங்குகளைப் பரீட்சைக்கமிஷனர் செய்திருக்கின்ருர். சுமார் 5,00,000ரூபாசெலவில் வாங்கப்படும் யந்திரசாதனங்கள்கொண்டு அவைகள் துரிதமாக அச்சடித்து வழங்கப்படும்.

## இந்திய புகையிரதப் பிரயாணகட்டணம்

இதுவரை கொழும்புக் கோட்டையிலிருந்து 'சென்னைக்கு 35ரூபா25சதமாகவிருந்த மூன்றும்வகுப்புப் புகையிரதகட்டணம இப்போது 47ரூபா02 சதமாக அதிகரித்திருக்கிறது. இதேபோன்று முதலாம்வகுப்புப் புகையிரதப்பிரயாணத் திக்கெற்கட்டணம் 109 ரூபா 50சதத்திலிருந்து 143ரூபா71 சதமாக அதிகரித்திருக்கிறது. அந்நியச்செலாவணி உரிமைச்சான்றிதழின் கீழ் இக்கட்டணம் முன்னர்இருந்ததிலும் 45சதவிகிதம் கூடியிருக்கிறது.

## வெற்றிடங்கள் இல்லை

இலங்கைப் போக்குவரத்துச்சபையில சாரதிகள், கண்டக்டர்மார், இன்ஸ்பெக்றர்மார், மெக்கானிக்குகளுக்கு இப்போதைக்கு இடமில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், இந்தநான்குபிரிவினரிலும் சுமார்2,000பேர் தேவைக்குமேற்பட விருப்பதைச்சபைகண்டறிந்திருப்பதே.

## யாழ்ப்பாண மாநகரசபை தேர்தல் தினம்

யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் வருகிறமார்கழிமாதம் 3ஆம்திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறுமெனத் தெரியவருகிறது. போட்டியின்றி அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள 6ஆம், 19ஆம் வட்டாரங்கள் நீங்கலாக ஏனைய21வட்டாரங்களுக்கும் 72பேர் போட்டியிடுகின்றனர். 21 வட்டாரங்களிலும் வாக்காளர்சென்று வாக்களிக்கும்இடங்களும் தெரிவுசெய்யப்பட்டுவிட்டன.

## விஸ்வமடுக்குள விளைவு

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள விஸ்வமடுக்குளப் படித்தவாலிபர் குடியேற்றத்திட்டத்திலே மிளகாய், வெங்காயம்போன்ற உபஉணவுப்பயிர்ச்செய்கை பெரும்பலன் அளித்துள்ளது. அங்கே இவ்வருடம் 1,960 அந்தர் வெங்காயமும், 215அந்தர்மிளகாயும் விளைந்திருக்கின்றன.

## இந்திய தபால் சேவை

தற்பொழுது இந்தியாவுக்குக் கப்பல் மூலம் நடைபெறும் தபால்சேவை வாரத்துக்குஇருதடவையாகத் தலைமன்னார்வழியாக நடைபெறுகிறது. ஆனல் காலநிலைக் கோளாறுகாரணமாக இத்தபால்சேவை கார்த்திகை, மார்கழிமாதங்களிலே நிறுத்திவிடப்படும். இந்தஇருமாதங்களிலும் பத்துத்தினங்களுக்கு ஒருதடவை தூத்துக்குடிக் கப்பல்மார்க்கமாக இத்தபால்சேவை நடைபெறும். தைமாத முதல் தலைமன்னார்வழியாக முன்போல் வாரம்இருமுறை தபால்சேவை நடைபெறும்.

## அடுத்தவருட மேதினம்

அடுத்தவருடம் வைகாசி1ஆம்திகதியும், 2ஆம்திகதியும் வெசாக்விடுமுறைத் தினங்களாக ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதனல் வைகாசி3ஆம் திகதியை மேதினமாகத் தொழிலாளர்கள் கொண்டாடுவதற்குவசதியாய் அதனைச் சட்டபூர்வமான விடுமுறைத்தினமாக்க அரசாங்கம் நடவடிக்கைஎடுத்து வருகிறது.

# வண. பியோசுவாமிகளைத் தரிசித்தவர்கள்

கடந்த 50ஆண்டுகளாக நம்திருமீட்பரின் ஐந்துதிருக்காயவரத்தராய் விளங்கி உலகப்பிரசித்தி பெற்றிருந்து அண்மையிலே அமரத்துவமடைந்த வண. பியோஅடிகளாரை அவர்மரணிப்பதற்குச் சிலமாதங்களின்முன் நேர்முகமாகச்சந்தித்த இலங்கைமக்களிலே கொழும்பைச்சேர்ந்த லேயோ பெறேருதம்பதிகளும், அவர்களின் 14 வயதுடைய புதல்வியான லீலாமணியும் அடங்குவார்கள். இவர்கள் இத்தாலியின் தென்பகுதியிலே சான்ஜியோவான்னிஎனும் நகரில் அவர்வசித்திருந்த ஆச்சிரமத்தைஅடைந்து சென்றவைகாசிமாதத்திலே அவரைக் கண்டுகொள்ளும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

திரு. பெறேரு அவர்கள் கொழும்புப் போட்கமிஷனிலே உத்தியோகம் வகித்திருப்பவர். அந்த ஆச்சிரமத்திற்குத் தமமுடையமூன்ருவது பயணம் அதுவென இவர்கூறுகின்ருர். 1966-ம்ஆண்டின் வைகாசியிலே இவர்கோர்சிலிஸ்தர்சபைக்குழு ஒன்றுடன்சேர்ந்து சுவாமிகளைத் தரிசித்தார். பின்னர் 1967ஆம்ஆண்டின் வைகாசியிலே தமதுபாரியார் சமேதராய் அவரைச்சந்தித்தார்.

சுவாமிகளைச்சந்தித்த மற்றொரு யாத்திரிகர் கொட்டாஞ்சேனையிலே ஹில்வீதியில் வசிப்பவரான திருமதி லூஸியன் பி. டிசில்வா அவர்கள். சுவாமிகளின்தரிசனையைப் பெற்றபோது தான்பெரிதும்பக்தியருட்சியும், மனவருட்சியும் கொண்டதாக இவர் கூறுகின்ருர். சுவாமிகளாலேயே தொடவும், ஆசீர்வதிக்கவும்பட்ட அவரிலைகடைசியான படங்களைச் சமீபத்திலே இலங்கையில்பெற்றவர் இவரே.

## மாந்தீவின் வருடாந்த பெருநாள்

மாந்தீவின் பாதுகாவலாளியான பரிசுத்தவியாகுலமாதாவின் வருடாந்த திருநாள் அத்தீவிலுள்ள தொழுநோயாளர் ஆஸ்பத்திரியில் இருந்துவரும் கத்தோலிக்க நோயாளராலும், பணியாளராலும் அங்குள்ள கத்தோலிக்கர்அல்லாத நோயாளர்களின் பூரணஒத்துழைப்புடன் அண்மையிலே கொண்டாடப்படலாயிற்று. திருகோணமலைத் துணைமேற்றிராணியாரான மகாவந். பி தியோகுப்பிள்ளை ஆண்டகை அத்தீவின் இறங்குதுறைப் பாலத்தில் வரவேற்கப்பெற்று ஊர்வலமாகக் கோவிலுக்கு அழைத்துச்செல்லப் பெற்றனர். அங்கே தொழுநோயாளரில் ஒருவர் வரவேற்புரை நிகழ்த்தினர். திருநாள்பாடற்பூசை ஆண்டகைஅவர்களால் தமிழில்நிறைவேறியது. அதன்மேல் அவர் நோயாளரின் வாட்டுகளைத்தரிசித்து அவர்களுடன் பரிவாகப்பேசி ஆசிகூறினர்.

## பாப்பானவரைப் பின்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மென்று அவர் எழுதியிருக்கின்ருர். "கர்ப்பத்தடைகளுக்கு மாறுகத் திருச்சபையின் பாரம்பரியமான போதனைகளை நிலைப்படுத்திப் பாப்பானவர்செய்துள்ள தீர்ப்பானது குடும்பகட்டுப்பாட்டு வழிமுறைகளைக் கைக்கொள்வது கத்தோலிக்க தம்பதிகளுக்குப் பாவமான ஒருகாரியமாகச் செய்கின்றது.

'இலகுவாகச் சம்பாத்தியம், சம்பளம், பதவிஉயர்வு, அதிகாரபதவி பெறவேண்டுமென்ற பெருவாஞ்சையால் தங்கள்மனச்சாட்சியைக் கொலைசெய்துள்ள குடும்பகட்டுப்பாட்டு அதிகாரிகளால செய்யப்படும் பிரசாரத்திலும், வழிமுறைகளிலுமிருந்து இந்துமக்களை காத்துவைக்குமுகமாக நமதுசங்கராச்சாரியர்களும், மடாதிபதிகளும் (இந்துக்களின் ஆத்மீகதலைவர்கள்) இத்தகைய ஏதாவதுபோதனைஒன்றை விடுக்கமுடியாதா?"

"செயற்கை வழிமுறைகளால் ஏற்படக்கூடிய சன்மார்க்கக்கெடுதியையும், அதன் தீயவிளைவுகளையும்பற்றி நம்சமயத்தலைவர்கள் அறியாமையுள்ள இந்துக்களுக்கு எடுத்துக்கூற முடியாதா? இந்துக்கள் தொடர்ந்து சனத்தொகையில் குறைந்துகொண்டுவந்து, ஈற்றிலேமுற்றாக அழிந்தொழிந்து போகவேண்டுமா? இந்துக்களை எவரேனும் காத்துவைக்க மாட்டார்களா? கத்தோலிக்கருடையதுபோன்று ஒழுங்குபடுத்தப்பட்ட ஒருசமயமாக அதுவும்இருந்தாலோ!" என்று அவர் வரைந்திருக்கின்ருர்.

## சுவிற்சர்லாந்து தேசத்தில் யேசுசபையினருக்கு ஒருவிநோதத்தடை

சுவிற்சர்லாந்துதேசத்தில் புரொட்டஸ்தாந்து சமயஉற்பத்திகாலந்தொட்டு கத்தோலிக்க யேசுசபையினருக்கு பலதடைகள் விதிக்கப்பட்டன. படிப்படியாக இவற்றுள் பல நீக்கப்பட்டு விட்டனவெனினும் இன்னும் சிலநிலவுகின்றன. வேதப்பரப்புதல் வேலையிலும் பள்ளிக்கூட வேலையிலும் ஈடுபடப்படாதெனும் தடை இன்னும் இருக்கிறது. ஆனல் இன்று சுமார் 200 யேசுசபைக்குருமார் அங்கு வேலைசெய்து வருகின்றனர். பெரும்பாலும் மேற்றிராசனக்குருமாருக்கு இவர்கள் உதவிசெய்து வருகின்றனர். யேசுசபைக் குருமாரில் பழையகாலந்தொட்டு இருந்துவந்த துவேஷமே இப்படியானசட்டத்துக்குக் காரணம். ஆனல் இந்த எஞ்சிய தடைகளும் விரைவில் நீக்கப்படும் அறிகுறிகள் இருக்கின்றன. நாட்டில் இன்று யேசுசபைக் குருமாருக்குப் பெரும் மதிப்பு இருக்கின்றது.

## மரணஅறிக்கை

வல்வெட்டித்துறைவாசரும், இலங்கைத் தந்திப்பகுதிப் பரிசோதகராகப் பலகாலமாகக் கடமையாற்றி இளைப்பாறியவரும், புனித செபஸ்தியார் ஆலயத்தின் சங்கிறிஸ்தாமாகச் சிறப்பாகச் சேவைசெய்து வந்தவருமாகிய திரு. **சாமிநாதர் செபஸ்தியாம்பிள்ளை** அவர்கள் சென்ற ஒக்டோபர் மாதம் 31-ந் திகதி மரணத்திரையுள் மறையலாஞர். அவர் தமது அந்திமதேவதிரவிய அனுமானங்கள் யாவற்றையும் தமது குருபுதல்வன் வண. S. E. விஜெயரத்தினம், O. M. I. அவர்களிடம் பெற்றுத் தமது 79-ம் வயதில் பரமபதம் அடைந்தார். இவரின் ஒருபுத்திரி சங். ஜெறடீன் திருக்குடும்பசபைக் கன்னியாஸ்திரியாகப் பணியாற்றி வருகின்ருர்.

இவரின் பிரேத ஊர்வலம் மறுநாள் சாயந்தரம் 4மணியளவில் பெருந்திரளானமக்கள் புடைசூழ, பலகுருமார் கன்னியாஸ்திரிமார் சமுகமளிக்க அநேக மாணவமாணவிகள் அணிவகுத்துநிற்க, நடைபெற்றது. இறுதிச்சடங்கு ஆராதனைகளை வீட்டிலும், சேமக்காலையிலும் அவருடைய குருபுதல்வனே நடத்திவைத்தார்

இவரை இழந்து துயருறும் அவரின் மனைவிமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

R. I. P.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம்ஆு கார்த்திகைமீ 9-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org